**இலங்கை மாநாட்டுப் பணியகம் - 2014**

இலங்கை மாநாட்டுப் பணியகத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க இலங்கை சுற்றுலா செயற்பாடுகள் அதிகாரச்சட்டத்தின் 20 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் பணியகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு

நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பணியகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பணியகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, இலங்கை மாநாட்டுப் பணியகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் (SLPSAS)

இ.பொ.து.க.நி. இலக்கம் 03 இன் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் முன்னைய ஆண்டு காலப்பகுதிக்குரிய சீராக்கம் செய்யப்பட வேண்டிய ரூபா 7,630,859 ஆன வருமான மிகை ஏற்பாடு ஒப்பீட்டுப் பெறுமதிகளின் சீராக்கமாக நிதிக்கூற்றுக்களில் இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) கட்டிட வளாகத் திருத்தங்களுக்காக செலவிடப்பட்ட ரூபா 2,020,565 ஆன செலவினம் நிலையான சொத்துக்களாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு எஞ்சிய ரூபா 1,954,698 கிரயமான நுகர்வுப் பொருள் இருப்பு மற்றும் எஞ்சிய மேம்பாட்டு உருப்படிகள் என்பன நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதிய முகாமைத்துவ வங்கிக் கணக்கிலிருந்தும் நிலையான வைப்புக்களினாலும் உருவான 333,163 தொகையான வட்டி வருமானம் மீளாய்வாண்டின் வருமானத்திற்கு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிலையான வைப்புக் கணக்கிற்கு சுயமாக வட்டி வைப்புச் செய்யப்படுவதால் அதிகரித்த ரூபா 453,099 பெறுமதியான வைப்புக்கள் கணக்கிற்கு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கணக்காய்விற்கான சான்றின்மை

கீழே காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களுக்கெதிரே சுட்டிக்காட்டப்பட்ட சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

| கணக்கின் விபரம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா | |
| கடன்கொடுத்தோர் | 801,438 | மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதம் |

| | | |
|---|---|---|
| அட்டுறு செலவினம் | 225,716 | - மேற்படி - |

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

திருப்பிப் பெறவேண்டிய பெறுமதிசேர் வரியாகிய ரூபா 450,554 தொகை 2011 ஆம் ஆண்டு முதல் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், அதனை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | விபரங்கள் |
|---|---|
| (அ) 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க இலங்கை சுற்றுலா செயற்பாடுகள் அதிகாரச்சட்டத்தின் 24(8) ஆம் பந்தி | சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தால் பணியகத்திற்கு வழங்கப்பட்ட தொகையில் சேமிப்பொன்று அல்லது அதனது பகுதி மீள சுற்றுலா அபிவிருத்தி நிதியத்திற்கு அறவிடுவதற்கு சுற்றுலா சட்டத்தில் சட்ட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாதிருந்த போதிலும், 2014 ஆம் ஆண்டில் இலங்கை மாநாட்டு பணியகத்தினால் ரூபா 40,000,000 தொகையினை இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபைக்கு திருப்பி அனுப்பி வைத்திருந்தது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்<br>நிதிப் பிரமாணம் 371(5)பந்தி | நிதியாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வழங்கப்பட்ட பணக் கட்டுநிதி கையளிக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், பணியகத்தின் முடிவுக் கணக்குகளில் ரூபா 20,000 தொகையான கட்டுநிதி மீதியொன்று காண்பிக்கப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (இ) | 2006 இன் தேசிய கொள்வனவு முகவராண்மை கைநூலின் 4 ஆம் அத்தியாயத்தின் 2.1(அ) பந்தி | எதிர்வரும் ஆண்டிற்காக விரிவான திட்டமொன்றுடன் கூடிய குறைந்தது மூன்று ஆண்டுகளுக்காக கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், பணியகம் அந்த அறிவுறுத்தல் களை கடைப்பிடித்திருக்கவில்லை. |
| (ஈ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/2 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றிக்கை | கணனித் துணைப்பாகங்கள் மற்றும் மென்பொருள் சம்பந்தமாக நிலையான சொத்துப் பதிவேடு ஒன்று பேணப்படவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான பணியகத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவுகள் ரூபா 49,594,173 மிகையாக இருந்ததுடன், இதற்கொப்பான முன்னைய ஆண்டில் ரூபா 60,811,425 மிகையாக இருந்தது. மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 11,217,252 ஆன வீழ்ச்சியொன்று காணப்பட்டதுடன், வியாபாரச் செலவினங்களில் ரூபா 17,514,026 ஆன அதிகரிப்பு இவ்வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டின் போது பணியகத்தின் வருமானம் ரூபா 117,450,350 ஆக இருந்ததுடன், அது முன்னைய முன்னைய ஆண்டின் ரூபா 108,714,513 உடன் ஒப்பிடுகையில் 8.03 சதவீத அதிகரிப்பொன்றைக் காட்டியது. அவ்வாறே, முன்னைய ஆண்டின் போது பணியகத்தின் மொத்த செலவினம் ரூபா 47,903,089 உடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது ரூபா 67,856,177 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், அது 41.7 சதவீதமான அதிகரிப்பாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலா விவகார அதிகாரச்சட்டத்தின் 42(2) பிரிவின் பிரகாரம் பின்வரும் இலக்குகளையும் நோக்கங்களையும் மீளாய்வாண்டிலோ அல்லது முன்னைய ஆண்டுகளிலோ பணியகத்தால் நிறைவேற்ற முடியாதிருந்தது.

(அ) சர்வதேச, வலயரீதியான மற்றும் உள்நாட்டு மாநாடுகள், கூட்டங்கள் மற்றும் கண்காட்சிகள் நடைபெறும் இடமாக மற்றும் சலனமடையும் சிறு சுற்றுலா இடமாக இலங்கையை ஒருங்கிணைத்தல் மற்றும் ஒத்துழைப்புடன் அபிவிருத்தி செய்தல் மற்றும் சுற்றுலாச் சந்தையில் இலங்கை தொடர்பாக சந்தைப்படுத்தல் நடவடிக்கைகள் ஏற்படுவதைப் பொறுப்பாகத் திட்டமிட்டு பொதுக்கொள்கை ஒன்றை ஏற்படுத்துதல்.

(ஆ) மாநாடுகள், கூட்டங்கள் மற்றும் கண்காட்சிகளை வெற்றிகரமாக நடாத்துதல் மற்றும் சலனமடையும் சிறு சுற்றுலா நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்குவதற்குப் பொறுப்பாக இலங்கையிலும் வெளிநாடுகளிலும் மாநாடுகள், கண்காட்சிகள் மற்றும் சிறு சுற்றுலாக்களை ஒழுங்குபடுத்துபவர்களுடன் ஒருங்கிணைந்து ஒத்துழைப்பாக இருத்தல்.

(இ) மாநாடுகள், கூட்டங்கள், கண்காட்சிகள் மற்றும் சலனமடையும் சிறு சுற்றுலா நிகழ்ச்சித்திட்டங்களது பல்வேறு பிரிவுகளிலும் உள்ளோருக்கும் அமைப்புகளுக்கும் தொழில்சார் நியமங்களை விதித்தலும் அந்நியமங்களைப் பேணி அமுல்படுத்தலும்.

(ஈ) மாநாடுகள், கூட்டங்கள், கண்காட்சிகள் மற்றும் சலனமடையும் சிறு சுற்றுலாத்துறையின் பல்வேறு பிரிவுகளிலும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள பல்வேறு தரத்தினர் அல்லது அமைப்புகளினது தொழில்சார் நிபுணத்துவ அபிவிருத்தியைத் ஊக்குவித்தலும் மேம்படுத்தலும்.

(உ) மாநாடுகள், கூட்டங்கள், கண்காட்சிகள் மற்றும் சிறு சுற்றுலாவை அபிவிருத்தி செய்தலும் அவற்றின் மேம்பாட்டிலும் ஈடுபட்டுள்ள ஏதாவது சங்கங்கள் அல்லது அமைப்புகளுடன் இணைந்து கொள்ளலும், அவற்றில் அங்கத்துவத்தைப் பெறுவதற்கு அல்லது ஏதாவது சங்கம் அல்லது அமைப்புக்களுடன் உடன்படிக்கைகளில் ஈடுபடலும்.

(ஊ) இலங்கையிலும் வெளிநாடுகளிலும் இலங்கையை சுற்றுலா அல்லது சுற்றுலா மார்க்கமொன்றாக அபிவிருத்தி செய்தல், மேம்படுத்துதல் மற்றும் சுற்றுலாச் சந்தையில் சந்தைப்படுத்தலுக்கான வழிகாட்டுதலைப் பணியகத்திற்கு வழங்குதல்.

(எ) உபசரிப்புச் சேவை அடங்கலான போதியளவு, கவர்ச்சியானதும் வினைத்திறனுடனுமான சுற்றுலாச் சேவைகளைத் தொடர்ச்சியாக மேற்கொள்ளும் விதத்தில் அபிவிருத்திகளை மேற்கொள்ளுதலும் மேம்படுத்தலும்.

**4.2 பதவியணியினர் நிர்வாகம்**

பணியகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 27 சதவீத வெற்றிடம் நிலவியதுடன், முன்னைய ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் மனிதவளத்திற்கான மொத்தக் கிரயம் முறையே ரூபா 8.9 மில்லியன் மற்றும் ரூபா 8.1 மில்லியன் ஆக இருந்தது. இதற்கமைய, முன்னைய ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் ஒரு ஊழியரின் பொருட்டான கிரயம் முறையே ரூபா 997,867 மற்றும் ரூபா 1,019,193 ஆக இருந்தது.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 கூட்டிணைந்த திட்டம்**

2014 – 2016 காலப்பகுதிக்காக தயாரிக்கப்பட்டிருந்த கூட்டிணைந்த திட்டத்தைப் பரிசீலனை செய்தபோது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கூட்டிணைந்த திட்டத்தில் 2014 ஆம் ஆண்டிற்காக ரூபா 101,970,000 தொகையை செலவிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ரூபா 64,120,000 தொகையை செலவிடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தமையால் கூட்டிணைந்த திட்டத்திற்கமைய செயல்திட்டம் தயாரிக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) கூட்டிணைந்த திட்டத்தில் 2014 ஆம் ஆண்டிற்கான திட்டத்தின் பிரகாரம் மூன்று செலவினத் தலைப்புகளின் கீழ் செலவினம் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் போது எய்துவதற்கு எதிர்பார்த்த இலக்குகளும் நோக்கங்களும் காட்டப்படவில்லை.

**5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2003 ஜுன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 பந்தியின் பிரகாரம், அண்மித்த முன்னைய ஆண்டுகளின் செயற்பாட்டு விளைவுகள் மற்றும் தந்திரோபாய திட்டம் மீளாய்வு செய்யப்பட்டு முகாமைத்துவத்தின் பொறுப்பு செயல்நடவடிக்கைத் திட்டத்தில் தெளிவாக இனங்காணங்கூடிய வகையில் திட்டமிடப்பட்டு காலத்திற்குரித்தாக எய்துவதற்காக எதிர்பார்த்த இலக்குகளையும் நோக்கங்களையும் நிறைவேற்றக்கூடிய வகையில் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டுமாயினும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட எதிர்பார்த்த இலக்குகளும் நோக்கங்களும் ஆண்டின் போது எய்தப் பெற்றனவா என்பதை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் போதியளவிலான தகவல்கள் உள்ளடக்கப்பட்ட செயலாற்றல் அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 5.3 உள்ளகக் கணக்காய்வு

பணியகத்தின் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவால் மேற்கொள்ளப்பட்ட போதும், நிதிப் பிரமாணம் 133 இன் படி பணியகத்தின் செயற்பாடுகளுக்கிணைவான உள்ளகக் கணக்காய்வு செயற்பாடுகள் மேவுகை செய்யப்பட்டிருக்கவில்லை.

## 5.4 கொள்வனவுத் திட்டம்

தேசிய கொள்வனவு முகவராண்மைச் சுற்றறிக்கையின் 8 ஆம் இலக்கத்தின் 4.2.1(பீ) இன் பிரகாரம் பிரதான கொள்வனவுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்படவில்லை.

## 5.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான செலவுகளுக்கிடையே குறிப்பிடத்தக்க முரண்கள் (முரண்கள் 25 சதவீதத்திற்கு மேற்பட்டவை) அடங்கிய 20 செலவின விடயங்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5.6 ஆண்டறிக்கையை பாராளுமன்றத்தில் முன்வைத்தல்

இலங்கை மாநாட்டுப் பணியகத்தின் 2012 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை 2014 ஆம் ஆண்டின் போது பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டிருந்தது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது பணியகத்தின் தலைவருக்கு அறிவிக்கப்பட்டது. கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(ஆ) கணக்கீடு

(இ) மேம்பாட்டு நடவடிக்கைகளைச் செயற்படுத்தல்

(ஈ) மனிதவள முகாமைத்துவம்

(உ) உள்ளகக் கணக்காய்வு